Mid-day meals in Schools under Compulsory Education.

531. MR. A. CHIDAMBARANATHA NADAR (*Kalkulam II—Hindu Nadar Reserved*) :

1. கட்டாயக்கல்வி பயிலும் ஏழைக் குழந்தைகட்குக் கஞ்சி கொடுப்பது எம்முறையை அனுசரித்து?

2. ஏழைக்குழந்தைகட்குப் போதுமான முறையில் கஞ்சி கொடுக்கப்படுகின்றதா?

3. கஞ்சி குடிக்க ஏழைக் குழந்தைகட்குப் பாத்திரம் வாங்க சர்க்கார் யாதாயினும் வசதி செய்துதுண்டா?

4. அப்படியானால், சின்னஞ்சிறு ஏழைக் குழந்தைகள் பாடசாலைக்கு புத்தகமும், சிலேட்டும் கொண்டுவரும் கையால் தேங்காய்ச் சிரட்டை கொண்டுவருவதின் மர்மம் என்ன?

HON'BLE MR. T. M. VARGHESE: (1) Clause 25 of the Rules framed under the Travancore Primary Education Act VIII of 1121.

(2) Yes.

(3) No. The children have to bring their own plates and cups.

(4) The question does not arise in view of the answer to part (3).

Construction of a parapet wall and steps in the Krishnan puthoorkalwai:—

532. MR. A. CHIDAMBARANATHA NADAR :

கீழ்க்காணும் வினாக்களுக்கு கண்யம் தங்கிய பப்ளிக் ஒர்க்ஸ் மந்திரியவர்கள் தயை கூர்ந்து பதிலளிப்பார்களாக:

1. சம்பக்குளத்திலிருந்து கிருஷ்ணன்-புதூர்க் கால்வாய்ப் புறப்படக் கூடிய இடத்தில் குளிப்பதற்கு ஓர் படித்துறைக் கட்டித்தர வேண்டுமென்று (bathing ghat) அவ்விடத்திலுள்ள மக்கள் பல தடவைகளிலும் மனுக்கள் சமர்ப்பித்த பின்னரும், சர்க்கார் அதற்கோர் சலுகைச் சாணிக்காமலிருப்பதின் காரணம் என்ன?

2. கிருஷ்ணன்-புதூர்க் கால்வாய் கோட்டாறு-தர்மபுரம் ரோட்டில் குறுக்கிடும் சுண்டபற்றிவிளை முச்சந்தியில் கலுங்குகள் இல்லாத காரணத்தால் (waraiet walls) அனேக வண்டிகள் மறிந்து விழுந்ததாகவும், குழந்தைகள் விழுந்து உயிர் நீத்ததாகவும் சர்க்காருக்கு மனுக்கள் வந்துதுண்டா?

3. அதே இடத்தில் குளிப்பதற்குள்ள சௌகரியம் செய்ய பன்முறை மனுக்கள் சமர்ப்பித்தப்பின்னரும் சர்க்கார் அதற்கு இசையாத காரணம் என்ன?

4. நிலைமை இவ்வாறிருக்க அதற்குப் பொறுப்பு வாய்ந்த ஆபீசர் அந்த இடத்தில் குளிப்பதற்கு சௌகரியம் செய்வதை விட்டு விட்டு கோட்டாறு—தர்மபுரம் ரோட்டில் நான்காவது மைலில்ச் சென்று (bathing ghat) ஸ்நானஸ்தலம் அமைக்க முயற்சி செய்வதின் மர்மம் என்ன?

LIBRARY ARCHIVES Kerala Legislative Assembly